## ஜனதா தனிநபர் விபத்து பாலிசி

### 1. சிறப்பு அம்சங்கள்

10-70 ஆண்டுகள் வயதிற்கு இடைப்பட்ட நபர் யாராயினும், அவரது பாலினம், தொழில் அல்லது பணி எதுவாக இருப்பினும், ஜனதா தனிநபர் விபத்து பாலிசியின் கீழ் காப்பீடு செய்யப்படலாம்.

### 2. காப்பீட்டின் நோக்கம்

வெளிப்படையான மற்றும் வெளியில் தெரியக்கூடிய வழிகளினால் விளைந்த விபத்திலிருந்து நேரடியாகவும் மற்றும் அதன் மூலம் மட்டுமே காப்பீடு செய்த நபர் ஏதேனும் உடல் ரீதியிலான காயப்படுபவரானால் மற்றும் அவ்விபத்து நிகழ்ந்த 12 காலண்டர் மாதங்களுக்குள் அத்தகைய உடல் ரீதியிலான காயம், அதன் ஒரே மற்றும் நேரடி காரணமாக அவ்விபத்து இருக்குமானால், பலன்களுக்கான அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி இன்சூரன்ஸ் நிறுவனம், காப்பீடு செய்த நபருக்கு தொகையினை வழங்கும்.

| பலன்களுக்கான அட்டவணை | | வழங்கப்படக் கூடிய காப்புத் தொகை |
|---|---|---|
| (i) | உயிரிழப்பு | காப்புத் தொகையில் 100% |
| (ii) | இரு கண்களின் முழுமையான பார்வையிழப்பு அல்லது இரு கைகள் அல்லது கால்களின் நிரந்தர இழப்பு அல்லது ஒரு கண்ணின் பார்வையிழப்பு மற்றும் ஒரு கை அல்லது காலின் நிரந்தர இழப்பு | காப்புத் தொகையில் 100% |
| (iii) | ஒரு கண்ணின் முழுமையான மற்றும் மீண்டும் பெறமுடியாத பார்வையிழப்பு அல்லது ஒரு கை அல்லது காலின் இழப்பு | காப்புத் தொகையில் 50% |
| (iv) | விபத்தின் காரணமாக நிரந்தர முழுமையான ஊனம் | காப்புத் தொகையில் 100% |

### 3. காப்பீட்டுத் தொகை

ஒரு நபருக்கு ஒரு ஆண்டுக்கு குறைந்தபட்ச தொகையாக 25,000 – க்கு காப்பீடு செய்யப்பட்டு பாலிசி வழங்கப்படலாம். ஒரு ஆண்டுக்கு, ஒரு நபருக்கு அதிகபட்ச காப்பீட்டுத்தொகை ரூ.1,00,000.

### 4. பிரிமியம்

ரூ.25,000 பிரீமிய விகிதமானது, ரூ.15 ஆகும். காப்பீடு செய்யப்படும் தொகையானது, ரூ.25,000 – த்தின் பன்மடங்குத் தொகையாக அதிகபட்சம் 1 லட்சம் மற்றும் மற்றும் அதற்கேற்ற பிரீமியம் வசூலிக்கப்பட வேண்டும்.

### 5. குழுமம் தள்ளுபடி

| குழு அளவு | தள்ளுபடி (%) |
|---|---|
| 101 – லிருந்து 1000 வரை | 5 |

| | |
|---|---|
| 1001 – லிருந்து 10,000 வரை | 7.5 |
| 10,001 – லிருந்து 50,000 வரை | 10 |
| 50,001 – லிருந்து 1,00,000 வரை | 12.5 |
| 1,00,001 – லிருந்து 2,00,000 வரை | 15 |
| 2,00,001 – லிருந்து 5,00,000 வரை | 20 |
| 5,00,001 – லிருந்து 10,00,000 | 25 |
| 10 லட்சத்திற்கும் மேல் | 30 |

குழுமம் காப்பீடானது, பெயரிடப்பட்ட குழுக்களுக்கு மட்டுமே வழங்கப்படவேண்டும். குழுமம் தள்ளுபடி மற்றும் பிற பலன்களை பெற்று பயனடையும் நோக்கத்திற்காக முன்மொழியப்படும் “குழுவானது” கீழே தரப்பட்டுள்ள வகையினங்களுள் ஏதாவது ஒன்றின் கீழ் தெளிவாக இடம்பெற வேண்டியது அவசியமாகும்.

- பணியிலமர்த்துவோர் – பணியாளர் உறவு (பணியாளரை சார்ந்திருப்போர் உட்பட)
- மாநில / மத்திய அரசுகள் பிரிமியத்தொகையை செலுத்துகின்ற, முன்பே அடையாளம் காணப்பட்ட பிரிவுகள் / குழுக்கள்
- பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்கள்
- பதிவு செய்யப்பட்ட சேவை கிளப்புகளின் உறுப்பினர்கள்
- வங்கிகளின் / டைனர்ஸ் / மாஸ்டர் / விசா கடன் அட்டைதாரர்கள்
- வங்கிகள் / வங்கிச்சேவை ஆற்றாத நிதி நிறுவனங்கள் (NBFC) வழங்குகின்ற வைப்புத்தொகை சான்றிதழ்தாரர்கள்
- வங்கிகள் / பொது வரையறை செய்யப்பட்ட நிறுவனங்களின் பங்குதாரர்கள் (ஷேர்ஹோல்டர்ஸ்)
- மேற்கூறப்பட்ட ஏழு வகையினங்களிலிருந்து மாறுபட்ட வேறு ஏதாவது வகையினம் தொடர்புடைய முன்மொழிவுகள் வருமானால், அவைகள் குறித்து தலைமையகத்திலுள்ள பொது மேலாளர் (தொழில்நுட்பம்) முடிவு செய்வார்.
- “எதிர்பார்க்கப்படும்” குழு அளவின் அடிப்படையில் எந்தவொரு குழு தள்ளுபடியையும் வழங்கக்கூடாது. பாலிசி எடுக்கின்ற நேரத்தில் குழுவில் பதிவு செய்திருக்கின்ற சரியான உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மட்டும்தான் தள்ளுபடியானது கருத்தில் கொள்ளப்பட்டு கணக்கிடப்பட வேண்டும்.
- இத்தகைய பாலிசியின் கீழ், எந்தவொரு சூழ்நிலையிலும் காப்பீடு செய்யப்பட்ட தனிநபர் அல்லாத வேறு எவருக்கும் கேட்புரிமத் தொகை (கிளைம்) கொடுக்கப்படக்கூடாது.
- உயர்வான காப்பீட்டுத் தொகைக்கான குழு பாலிசிகள் தேவைப்படும்போது, அவைகள் தனிநபர் விபத்து பாலிசியின் கீழ் கவரேஜ் செய்யப்பட வேண்டும்.

**6. நீண்டகால தள்ளுபடி**

| பாலிசியின் காலஅளவு (ஆண்டுகள்) | தள்ளுபடி (%) |
|---|---|
| 1 | இல்லை |
| 2 | 5 |
| 3 | 10 |
| 4 | 15 |
| 5 | 20 |

**7. சிறப்பு நிபந்தனை**

குழுமம் தள்ளுபடி, நீண்டகால தள்ளுபடி, சிறப்பு அம்ச தள்ளுபடி, கேட்புரிமை இல்லாததற்கான தள்ளுபடி மற்றும் வேறு எந்த தன்மை தொடர்பான தள்ளுபடிகள் / கழித்தல்களோடு கூடுதலாக பிற தொழில்நுட்ப தள்ளுபடிகள் / கழித்தல்கள் வழங்கப்பட்டிருக்குமானால், அனைத்து தள்ளுபடிகளும் ஒட்டுமொத்தமாக சேர்க்கப்படும்போது அத்தொகையானது, எந்தவொரு சூழ்நிலையிலும் 30% - க்கு அதிகமாக இருக்கக்கூடாது.

8. **விலக்குகள் (Exclusions)**

I. ஏற்கனவே இருக்கின்ற ஊனம்

II. வேண்டுமென்றே ஏற்படுத்திக்கொண்ட சுயகாயங்கள், தற்கொலை அல்லது தற்கொலைக்கான முயற்சியின் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்பிற்கான காயம் அல்லது திறனிழப்பு

III. மதுபானம் அல்லது போதைப்பொருளின் தாக்கத்தின் கீழ் உயிரிழப்பு அல்லது திறனிழப்பு

IV. ரேசிங், துப்பாக்கி சுடுதல், பெரு வனவிலங்குகள் வேட்டையாடல், மலையேறுதல், ஐஸ் ஹாக்கி, குளிர்கால விளையாட்டுகளின்போது நிகழும் உயிரிழப்பு அல்லது திறனிழப்பு

V. பித்துநிலை / பைத்தியம்

VI. குற்ற நோக்கத்தோடு கூடிய சட்டமீறல்

VII. போரின்போது நிகழும் பேராபத்துகளின் தொகுப்பு

VIII. அணுசக்தி / அணுகுண்டு தொடர்புடைய பேராபத்துகளின் தொகுப்பு

**9. காப்பீடு பாலிசி வழங்குவதில் முக்கியமான அறிவுறுத்தல்கள்**

I. தனிநபர் அல்லது குழு JPA – க்கு உரிய பாலிசியானது, அதிகபட்சமாக 5 ஆண்டுகால அளவிற்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

II. நீண்டகால பாலிசியாக இருந்தால், அதற்கான பிரிமியமானது ஒட்டுமொத்தமாக ஒரே தடவையில் முன்னதாகவே வசூலிக்கப்பட வேண்டும்.

III. நீண்டகால பாலிசியின் கீழ், ஆரம்பகால ஆண்டுகளில் கேட்கப்பட்டால் கூட பிரீமியத் தொகையை திரும்பத் தருவது என்பது அனுமதிக்கப்படாது.

IV. இழப்பு விகிதம் 70% மற்றும் அதற்கு மேல் இருக்கின்றபோது, குழு பாலிசியின் புதுப்பித்தல் ஊக்குவிக்கப்படக் கூடாது.

V. தற்போதைய JPA பாலிசியின் படி, PTD கவர் செய்யப்பட வேண்டும் மற்றும் உயிரிழப்பிற்கான காப்பு மட்டும் வழங்கப்படக் கூடாது.

## 10. நஷ்டஈடு கோரும்முறை

1. பாலிசியை வழங்குகின்ற அலுவலகத்திற்கு உடனடியாக அறிவிக்கை (நோட்டிஸ்) தரப்படவேண்டும்

2. க்ளைம் படிவமானது மருத்துவ சான்றிதழ் மற்றும் பில்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. உயிரிழப்பு கேட்புரிமைக்கு நியமனதாரர் கீழ்கண்டற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

a) இறப்புச் சான்றிதழ்

b) மெய் நகல்

c) பிரேதப் பரிசோதனை அறிக்கை

d) புகார் அளிக்கப்பட்டிருக்குமானால், காவல்துறையின் அறிக்கை

4. நீரில் மூழ்கியதன் காரணமாக, உயிரிழந்ததாக கருதப்படும் நபரின் க்ளைம் கோரிக்கைகள் கீழ்வரும் ஆவணங்களை சமர்பித்ததிலிருந்து 2 ஆண்டுகளுக்குப் பிறகே அத்தொகை வழங்கப்பட வேண்டும்.

a) காவல்துறை தகவல் அறிக்கை மற்றும் இறுதி புலண்விசாரணை அறிக்கை

b) சுங்கத்துறை / துறைமுக அதிகாரிகளின் கண்டறிந்த தகவலறிக்கை

c) உறுதிமொழி ஆவணம் - சான்றுறுதி அலுவலரின் சான்றுடன்

5. மேற்கூறப்பட்ட வழிமுறைகளுக்கு உட்பட்டு, காணாமல் போன அல்லது ஒட்டுமொத்தமாக இழக்கப்பட்ட மீன்பிடி படகுகளின் கேட்புரிம கோரிக்கைகளில், அந்நபர்கள் இறந்ததாக கருதப்பட்டு, அதற்கேற்ப கேட்புரிம கோரிக்கைகளுக்கான தொகை வழங்கப்படும்.

## 11. ஸ்டாம்பு வரி

காப்பீடு செய்யப்படுகின்ற ஒவ்வொரு 1000 ரூபாய்க்கும் 10 பைசா